விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 16 சனிக்கிழமை (30.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 193

ராம்கோ

RAMCO


MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தர ... சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## நயினை அம்பாளின் தேர் உற்சவத்தில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூசணி அம்மன் ஆலய தேர்த்திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டதாக நயினாதீவுச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை நயினாதீவு இறங்கு துறையில் வைத்து பக்தர்களின் அடையாள அட்டைகள் கடற்படையினரால் பெற்றுக் கொள் ளப்பட்ட போதிலும் அதனை மீளப்பெறுவதற்கு பக்தர்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்கினர்.

இதனால் அவர்கள் உடனடியாக தமது வீடுகளுக்கு திரும்ப முடியாத நிலையும் ஏற்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து நயினை செல்லும் வரையுள்ள பாதைகள் பாஸ் மற்றும் தீவிரசோதனையின் பின் மக்கள் பயணிப்பதற்கு அனுமதிக்கப்பட்டபோதும் இறுதியில் நயினை இறங்குதுறையில் உட்செல்லும் அனைவரது அடையாள அட்டைகள் பெறப்பட்டபின்னே உட்செல்ல அனுமதி வழங்கப்படுவது தற்போதைய நடைமுறையாகவுள்ளது.

இந் நிலையில் நேற்று முன்தினம் சுமார் 6 ஆயிரத்திற்கும் அதிகமான (06 ஆம் பக்கம் பார்க்க)

# ரணில்-மங்கள சந்திப்பையடுத்து ஐக்கிய தேசியக்கட்சிக்குள் குழப்பம்

## பலர் அரசுடன் தாவ முடிவு?

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவு அமைப்பாளர்களான மங்கள சமரவீரவும், ஸ்ரீபதி சூரியாராட்சியும் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக்கட்சியில் உள்முரண்பாடு தோன்றியிருப்பதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (06 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரப் பகுதிகளில் நேற்று கடும் சோதனை

யாழ்.நகரப் பகுதியில் நேற்றுக் காலை முதல் பெருமளவான இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு கடும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. நேற்றுக் காலை 10 மணி முதல் இச் சோதனை நடவடிக்கை ஆரம்பமானது.

மணிக்கூட்டு வீதியும் நாவலர் வீதியும் இணையும் சந்தி, கஸ்தூரியார் வீதியும் நாவலர் வீதியும் இணையும் சந்தி, கன்னாதிட்டி சந்தி, வின்சர் தியேட்டர் சந்தி, நகரப் பகுதி மற்றும் தட்டாதெரு ஆகிய இடங்களிலேயே சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறுகிய தூர இடை வெளியில் மூன்றுக்கு மேற்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையால் மக்கள் பெரும் அவலத்துக்கு ஆளாகினர்.

பயணிகள் பேருந்துகளில் பிரயாணம் செய்ய இருந்தவர்கள் அவற்றில் பயணம் செய்யாது கால்நடையாகச் சென்று அனைத்து சோதனைகளையும் முடித்துக் கொண்டு பேருந்துக்காக பல மணிநேரம் காத்திருந்த சம்பவமும் இடம் பெற்றது.

இதேவேளை நயினாதீவுக்குப் பயணிப்பதற்காகச் சென்றவர்களில் பலர் அங்கு செல்லாது தமது வீடுகளுக்கு திரும்பியதைக் காணக்கூடியதாகவும் இருந்தது. (ஏ)

## அரசு-விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம்

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெறும் இனப்பிரச்

திரும்பவேண்டுமென தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## நல்லூர் கோவில் வீதியில்

சந்தி, வின்சர் தியேட்டர் சந்தி, நகரப் பகுதி மற்றும் தட்டாதெரு ஆகிய இடங்களிலேயே சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறுகிய தூர இடை வெளியில் மூன்றுக்கு

இதேவேளை நயினாதீவுக்குப் பயணிப்பதற்காகச் சென்றவர்களில் பலர் அங்கு செல்லாது தமது வீடுகளுக்கு திரும்பியதைக் காணக்கூடியதாகவும் இருந்தது. (ஏ)

# அரசு-விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம்

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெறும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு சர்வதேச சமூகம் அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் அழுத்தம் கொடுக்கவுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் அரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுக்குத் திரும்பவேண்டுமென தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய அமெரிக்கா, யப்பான், ஐரோப்பிய ஒன்றியம் என்பன நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர்கள் இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு இதுவே தக்க சமயம் எனவும் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் (06 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் நேற்று கிளைமோர்த் தாக்குதல்கள்

## இராணுவம் உட்பட 9பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்று நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர். சுன்னாகம் மாகியப்பட்டி வீதியில் உள்ள அளவெட்டிப் பகுதியில் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்குவைத்து நேற்றுக் காலை 7.40 மணிக்கு இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இதில் இராணுவத்தினர் இருவர் உட்பட மூவர் படுகாயமடைந்தனர். இதன் பின் மேற்கொள்ளப்பட்ட (06 ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூர் கோவில் வீதியில் இருவர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோயில் வீதி ஐ.சி.ஆர்.சி. அலுவலகத்திற்கு அண்மையாக நேற்று மாலை 4.15 மணியளவில் இருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். சம்பவத்தில் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியைச் சேர்ந்த சிங்காரவேல் லோகேந்திரா (வயது 29), ஆனைக்கோட்டை வடக்கைச்சேர்ந்த சுப்பிரமணியம் அம்பிகைபாகன் (வயது 39) ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்கள் என சடலங்களில் காணப்பட்ட அடையாள (06 ஆம் பக்கம் பார்க்க)

# திருக்கோவில் பிரதேச சபைத்தலைவர் கைக்குண்டுத் தாக்குதலில் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

திருக்கோவில் பிரதேச சபைத் தலைவரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த தில்லைநாதன் உதயகுமார் (வயது 36) படுகொலை செய்யப்பட்டுள்ளார். திருக்கோவில் விநாயகபுரம் கப்புனார் வீதியில் உள்ள அவரது வீட்டுக்கு நேற்று முன்தினம் இரவு 8.50 மணியளவில் அடையாளம் தெரியாத ஆயுதக்குழுவினர் சென்று தில்லைநாதனை வெளியே அழைத்துள்ளனர்.

அவரது வீட்டிலிருந்து 100 மீற்றர் தொலைவுக்கு அழைத்துச் சென்று மிகக்கடுமையாகத் தாக்கி அவர் மீது கைக்குண்டையும் வீசியுள்ளனர். இதில் சம்பவ இடத்திலேயே உதயகுமார் உயிரிழந்தார். அவர் இரு பிள்ளைகளின் தந்தையாவார். (ச-5)

# காணாமல் போன 355 பேர் குறித்து வெளிவிவகார அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

காணாமல் போன 355 பேரில் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். சிலர் உயிருடன் இருக்கின்றனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கையில் காணாமல் போன 355 பேரின் பட்டியலை இலங்கையிடம் சமர்ப்பித்து விசாரணை நடத்துமாறு அமெரிக்கா கோரியிருந்தது.

இதற்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அமெரிக்க பிரதிச் செயலாளர் ஸ்ரிபன் மான் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு வருகை தந்தபோது காணாமல் போனதாகக் கூறப்படும் 355 பேரின் பட்டியலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து காணாமல் போனதாகக்கூறப்படுவோர் தொடர்பாக உரிய அரச நிறுவனங்களிடம் உதவி கோரப்பட்டது. அமெரிக்காவினால் (06 ஆம் பக்கம் பார்க்க)

# ஊரடங்கு நேரம்

யாழ். குடாநாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தில் மாற்றமில்லையென யாழ். பொலிஸார் தெரிவித்தனர். இதனடிப்படையில் இரவு 7 மணிக்கு அமுல்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம் மறுநாள் அதிகாலை 4.30 மணிக்கே தளர்த்தப்படுமென அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை ஊரடங்குச் சட்டம் 8 மணிக்கு தளர்த்தப்படுமென வெளியான செய்தியால் மக்களிடையே குழப்பம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு மக்கள் வங்கியால் நிதி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 46-வது ஆண்டு தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு மக்கள் வங்கி வட வலயத்தின் சார்பில் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் திருத்த வேலைகளுக்காகவும் பொருள்கள் அன்பளிப்பிற்காகவும் ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்து வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு நாளைக் காலை பகல் 11 மணியளவில் அடையாள சிரமதானத்துடன் ஆரம்பமாகி, சகல விடுதிகளுக்குமான மீள் மின்னேற்ற விளக்குகளை மாவட்ட வைத்திய அதிகாரி செல்வி சிவராணி சிவசோதி அவர்களிடம் மக்கள் வங்கி வட வலய உதவிப் பொது முகாமையாளர் த.க.ஆனந்தராஜா அவர்கள் கையளிப்பார். இந்நிகழ்வில் செல்வி என்.கனகரட்ணமும் கலந்து கொள்கிறார். (சு)

## விளையாட்டு விழா

கோப்பாய் சமூக சேவா சங்கப் பாலர் பகல் விடுதி விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் சரவணபவானந்தன் வித்தியாலய மண்டபத்தில் சமூக சேவா சங்கத் தலைவர் க.இ.குமாரசாமி தலைமையில் நடைபெறும்.(சு)

❖ ❖ ❖

கலைமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா நாளை நண்பகல் 12 மணிக்கு ஈவினை கலைமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

சனசமூக நிலைத் தலைவர் செ.ரவியன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், வலிதெற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருமதி செல்வவிநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (சு)

❖ ❖ ❖

புத்தூர் வடக்கு வங்கிவீதி உதயநிலா முன்பள்ளி பெற்றோர் சங்கம் நடாத்தும் உதயநிலா முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டுவிழா நாளை பிற்பகல் ஒரு மணிக்கு நவற்கிரி அ.மி.த.க.பாடசாலைக்கு அருகில் முன்பள்ளி பெற்றோர் சங்கத் தலைவி ற.விஜயதாஸ் தலைமையில் நடைபெறும். (சு)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்
### வைத்தீஸ்வராக் கல்லூரி
### 2006 க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை

1.B.கிரிசாந்தினி - 9A,C
2.P.மதியுகன் - 8A,2C
3.V.விஜித்தா - 7A, B,C,S
4.T.கேதாரகௌரி- 7A,B,2C
5.S.சிந்துஜா - 5A, B, 3C, S
6.K.சதீஸ்வரன் -5A,B,2C,S
7.K.ரேகா - 4A, 5B, S
8.S.நித்தியா - 4A, 3B,C,S
9.R.தவராணி -4A,2B,2C,2S
10.B.பத்மினி-3A, 4B, 2C
11.S.கார்த்திகேயன் -3A,3B,4C

சிறந்த பெறுபேறு பெற்ற இம் மாணவர்களையும் உயர் தர அனுமதி பெற்ற ஏனைய மாணவர்களையும் அவர்களிற்கு கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் மனமகிழ்வோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நன்றி

(154) -பாடசாலை நலன்விரும்பிகள்



சிவசர்வசிவ சிவமுருகசிவ

## 30-06-2007 சனிக்கிழமை வீரமாகாளி அம்மன் தீர்த்தத் திருவிழா:

**சமாதான வாழ்வும் சுதந்திரமும் தாரும் வீரமாகாளிதாயே!**

-நல்லூர் சிவமுருகன்.என்.தமிழ்மகன்.(குருக்கள்;பீ.ஏ.)-

பாய்ந்து வரும் தண்ணீர் புனித கிணற்றில் தீர்த்தம் ஆடி
பரி வாரங்களோடு வீதிவலம் வரும் பெரும்தாயே வீரமாகாளியேவா
சேய் நாம் படும் கொடும் துயர் சாவாம் பெரும் துன்பம் நீங்க
சமாதான வாழ்வுத் தீர்வு சுதந்திரம் தாரும் வீரமா காளிதாயே
சாய்க்கும் தலைகள் தெருவில் விழ செத்து அழியும் தமிழர் வாழ்வு
சாகாமல் அருளும் வீரமா காளியே சங்கரியே தெய்வமே வாவா
வாய் ஒலிக்கும் அரோகரா ஓசை விண் அதிர வரும் பக்தர்கள்
வாழ்வு பெற்று நன்றே வாழவும் வாழ்வு காப்பாயே வீரமாகாளியே

(C-198)


# பாண், பணிஸ் என்பவற்றின் விலைகள் நாளை முதல் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மாவின் விலை அதிகரித்துள்ளதனால் பாண், பணிஸ் வகைககளின் விலை, நிறை என்பன அதிகரிக்கப்பட்டுள்ளன. அதிகரிக்கப்பட்ட புதிய விலைகள் நாளை முதல் நடைமுறைக்கு வரும் என அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். அதிகரிக்கப்பட்ட விலை விபரம் வருமாறு.

| பொருள் | நிறை(கிராம்) | விலை (ரூபா) |
|---|---|---|
| பாண் | 400 கிராம் | 34.00 |
| கிறீம் பணிஸ் | 150 கிராம் | 20.00 |
| ரி பணிஸ் | 130 கிராம் | 17.00 |
| சங்கிலி பணிஸ் | 130 கிராம் | 17.00 |
| கொம்பு பணிஸ் | 70 கிராம் | 10.00 |
| அடைக்கேக் | | 15.00 |

# இராசிபலன்

30.06.2007
ஆனி 16 சனிக்கிழமை
பூரணை முன்னிரவு 8.03 மணிவரை
மூலம் மாலை 6.19 மணிவரை
இராகுகாலம் 8.56-10.26 மணி வரை
சுபநேரம் 2.56-4.26மணி வரை
பூரணை விரதம்

| | |
|---|---|
| மேடம்:- | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, புதிய திட்டமிடல், பிதா சிந்தை. |
| இடபம்:- | வாகன பயம், பாரிய தடங்கல், மரியாதைக் குறைவு, போசனசுகம். |
| மிதுனம்:- | அபூர்வ சந்திப்பு, தேக நலன், நினைத்த காரியம் கைகூடும், வாகன சுகம் |
| கடகம்:- | சத்துரு ஜெயம், நல்லமுயற்சி, மனமகிழ்ச்சி, உடல் நலம். |
| சிங்கம்:- | வியாபார விருத்தி, மனக்கிலேசம், உடல்நலக்குறைவு, பணக்குறைவு. |
| கன்னி:- | தன்னம்பிக்கைக்குறை ,தாய்வழிஉறவு, சுபநிகழ்வு, கல்வியில் ஆர்வம் |
| துலாம்:- | இனிய அனுபவம், புதிய பொருள்சேர்க்கை, சகோதரர் உதவி, விருந்துபசாரம் |
| விருச்சிகம்:- | அதிக செலவு, கௌரவக்குறைவு , குடும்பக் கவலை , எடுத்த கருமங்கள் தாமதமாகும். |
| தனுசு:- | ஜனவசியம், நண்பர்கள் உதவி, ஆழ்ந்த சிந்தை, சயனசுகம். |
| மகரம்:- | எடுத்த கருமங்கள் தாமதமாகும், சுபசெலவு, மனஸ்தாபம், திடீர் ப்பயணம். |
| கும்பம்:- | தொழில் சிந்தை ,நண்பர்கள் சந்திப்பு, பொருள் வருவாய், இஷ்டசித்தி. |
| மீனம்:- | தொழில்மேன்மை , சுபநிகழ்வு, பிறர் உதவி, முயற்சி பலிதம். |

-வளவன்


48 ஆண்டுகளாக அடியார்களுக்கு சேவையாற்றும்

## அமுதசுரபி அன்னதான சபை



'அமலனுக்கு அமுதளித்த
ஆதிநாயகி அன்பர்களுக்கு
உணவளிக்கும்அன்னபூரணி'



நயினைத் தாய் தீர்த்தமாடி வருகின்றாள்
வாழும் மனிதர்க்கெல்லாம்
வயிராற சோறிடவே!

(C-199)

# நீங்கள் தேடும் அந்தப் பொருள்... உங்கள் உள்ளேயே இருக்கிறது

இந்த உயிர்வாழ்க்கை என்ற அன்பளிப்பைப்பெற்ற மனிதர் என்றவகையில் நீங்கள் விரும்புவது என்ன? "நீங்கள் தேடிக்



கொண்டிருக்கும் அப்பொருள் உங்கள் உள்ளேயே இருக்கிறது" என்ற இந்த வாசகத்தைக் கூறும்முதலாவதுநபர்நான் இல்லை. அது மிக மிகப் பழமையான ஒரு வாசகம். ஆனால் அவ் வாசகத்தைப் பற்றிய விடயம் என்னவெனில் எப்போதெல்லாம் அது சொல்லப்படுகிறதோ அப்போதெல்லாம் அது புதிய வாசகம் போன்றே தோற்றமளித்துள்ளது. நீங்கள் மீண்டும் மீண்டும் அதனைக் கேட்டிருந்த போதும் அது முன்னொருபோதும் கேட்காத ஒன்று போலிருந்துள்ளது. அதாவது நீங்கள் தேடிக் கொண்டிருக்கும் அப் பொருள் உங்கள் உள்ளேயே இருக்கிறது.

அதன் கருத்து என்னவெனில் நான் தெரிந்துகொள்ள வேண்டிய ஏதோவொன்று இங்கேயே உள்ளது என்பதேயாகும். அதாவது நான் நிறைவுபெறுதல் என்பது என்னிடம் இருந்து தொலைதூரத்தில் இல்லை. என்னுடைய திருப்தி என்னிடமிருந்து தூரத்தில் இல்லை. என்னுடைய ஆனந்தம் என்னிடமிருந்து தூரத்தில் இல்லை. எனது உயிரும் என்னிடமிருந்து தூரத்தில் இல்லை.

எனது எல்லாப் பூட்டுகளையும் திறக்கக் கூடிய திறவுகோல் எனக்குள்ளேயே இருக்கிறது. எனது எல்லா வினாக்களுக்கும் விடை யளிக்கக்கூடிய விடை எனக்குள்ளேயே இருக்கிறது.

எனது விளங்கிக் கொள்ளல், எனது தெளிவு எனக்குள்ளேயே இருக்கின்றன. இந்த உலகத்தின் மழையிலிருந்து தப்ப நான் தேடும் பாதுகாப்பான இடம் எனக்குள்ளேயே இருக்கிறது.

அது என்னிடமிருந்து தொலை தூரத்தில் இல்லை. அதைவிடப் பெரியதான உண்மையும் இல்லை. நான் அதைப் பார்த்திருக்கிறேன். நான் உலகெங்கும் பயணம் செய்திருக்கிறேன். நான் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குப் போயிருக்கிறேன். அங்கு அவர்கள் அதே மொழியைப் பேசவில்லை. நாணயங்கள் வேறுபடுகின்றன.

அவர்கள் வாகனம் ஓட்டும்விதம் வேறுபடுகிறது. அவர்கள் வியாபாரம் செய்யும் விதம் வேறுபடுகிறது. மக்கள் பார்வைக்கு வேறுபட்டவர்களாகத் தோற்றமளிக்கிறார்கள். எவ்வளவு வேறுபாடுகள்? ஆனால் இந்த எல்லா வேறுபாடுகளின் இடையேயும் நான் ஓர் அழகான, எளிமையான ஒத்த தன்மையையும் பார்த்திருக்கிறேன். எது ஒத்ததாக இருக்கிறது? அதாவது நாம் எல்லோரும் நமக்கு உள்ளேயுள்ள அந்த அழகான பொருளுக்காகவே ஏங்குகிறோம் என்பதே ஒத்ததாக உள்ளது.

மகராஜி

## மனிதத் தன்மையின் தனிச்சிறப்பை உணர்வோம்!

மனிதத் தன்மையின் ஒரு தனிச்சிறப்பான அம்சம் எல்லாக் கலாச்சார, பௌதிகத் தடைகளுக்கும் அப்பாற்பட்டதாக விளங்குகிறது. வரலாற்றின் ஆரம்பத்திலிருந்தே இந்த ஒரு சிறப்புக்குணம் எல்லா மக்களிட மும் இருந்துள்ளது. நம்மெல்லோரிடமும் பொதுவாக உள்ளதென்பது என்ன?

**இதுபற்றிய ஒரு வீடியோ நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தொடர்புகளுக்கு :- 222 3705**

நம்மெல்லோருக்கும் தேவைகள் இருக் கின்றன. உயிர்வாழ்கின்ற எல்லாவற்றிற் கும் இருப்பதுபோன்று நம்மிடமும் பசி, தாகம் போன்ற தேவைகள் இருக்கின்றன. ஆனால் மனிதர்கள் வாழ்வதினால் மட்டுமே திருப்தியடைவதில்லை. உண்மையான நிறைவைப் பெறுவதற்கு நமக்கு அதிலும் கூடுதலானவை தேவைப்படுகின்றன. நமக்கு எவை கூடுத லாகத் தேவை என்பது கலாச்சாரத்திற்குக் கலாச்சாரம் வேறுபடு கிறது. அத்துடன் அவை காலத்தோடு சேர்ந்து தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்கின்றன. எனினும் அங்கு ஒரு மாறாத் தன்மையும் இருக்கின்றது. அதாவது நாம் விரும்புகின்ற எல்லாப் பொருட்களும் ஒரு வழியில் அல்லது வேறுவகையில் நமக்கு மனநிறைவைத் தருவதாக வாக்குறுதியளிக் கின்றன.

நாமெல்லோரும் நமது சொந்த தனிப்பட்ட வழிகளில் அதனைத் தேடினும் மகிழ்ச் சியைத் தேடுவதென்பது எல்லோருக்கும் பொதுவானதே. மக்களிடம் நிறைவுடன் இருக்க வேண்டும். வாழ்க்கையில் திருப்தியாக இருக்கவேண்டும் என்ற உள்ளார்ந்த நாட்டம் இருக்கிறது. ஆனால் இதனை நாம் எப்படி அடையலாம்? நிறைவை நம்மால் உண்மையாகவே அடையமுடியுமா அல்லது நமது சூழ்நிலைகள் நமக்குச் சாதக மாக அமையும்போது மட்டும் நாம் மகிழ்ச்சியை உணர் கின்றோமா?

ஒருவரின் உயிர்வாழ்க்கையில் சூழ் நிலைகள் காரணமாக ஏற்படாத ஒரு மகிழ்ச் சியைப் பற்றி மகராஜி பேசுகிறார். மாறாக ஒருவருக்கு இந்த உயிர்வாழ்க்கை கிடைத்திருப்பதனாலேயே பெறக்கூடியதாக உள்ள ஒரு மகிழ்ச்சியைப் பற்றி அவர் பேசுகிறார். 30 ஆண்டுகளுக்கு மேலாக மகராஜி இந்த எளிமையான, எனினும் ஆழமான செய்தியை அதனைக்கேட்க ஆவலாக உள் ளவர்களுடன் பகிர்ந்து வருகிறார்.

# வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் வரலாறும் அருட்கடாட்சமும்

நல்லூரைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழரசர்களாகிய ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சியில் கனக சூரிய மன்னன் காலத்தில் தெற்கரசனாகிய ஆறாம் பராக்கிரமபாகுவால் இளவரசனாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சப்புமல்குமாரன் என்றழைக்கப்பட்ட செண்பகப்பெருமாள் வடக்கை நோக்கிப் படையெடுத்து வந்து நல்லூர் நகரைக் கைப்பற்றி ஆட்சிசெய்த போது நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை ஸ்தாபித் தான்.


பின்பு மீண்டும் கனகசூரியன் புதல்வர்களாகிய பரராஜசேகரன், செகராஜசேகரன் ஆகியோரால் கைப்பற்றப்பட்டு ஆட்சி செய்யப்பட்ட பொழுது பரராஜசேகர மன்னன் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை அழகுபடுத்திப் புனரமைத்து நல்லூரில் தன் அரண்மனையைச் சுற்றிலும் நான்கு திசைகளிலும் நகர்காவற் தெய்வங்களாக வடக்கில் சட்ட நாதர் சிவன் கோவிலையும், கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் கோவிலையும், தெற்கில் கைலாசநாதர் கோவிலையும், மேற்கில் வீரமாகாளியம்மன் கோவிலையும் 1470ஆம் ஆண்டளவில் ஸ்தாபித்தான்.

நாற்றிசையும் புகழோங்கத் தமிழையும் சைவத்தையும் ஒருங்கே வளர்த்து ஆட்சி செய்துவந்த சக்கரவர்த்திகளினால் ஸ்தாபிக்கப்பட்டு அவர்களால் தொடர்ந்து பரிபாலனஞ் செய்யப்பட்டு அவர்களால் தொடர்ச்சியாக வீரத்தை வேண்டி நவராத்திரி விழாவின் போது தங்கள் படைக்கலன்களைக் கொலுவின் போது வைத்து வழிபட்டு அம்பாளின் அருட்கடாட்சம் பெற்று வெற்றிகளைக் குவித்து வந்தனர்.

இதற்கு சான்றாகச் சில வருடங்களின் முன்னரும் சங்கிலியன் மன்னன் பயன்படுத்திய பட்டாளத்து வாள் மானம்பூ உற்சவத்தின் போது கன்னி வாழையை வெட்டப் பயன்படுத்தினர். இத்தகைய சிறப்பு மிக்க இவ்வாலயம் தற்போது பரம்பரை பரம்பரையாக சைவக்குருமார்களால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

இலங்கையிலேயே முதன்முதல் மஹிசாசுர சம்ஹாரம் நடைபெற்ற அம்மன் ஆலயம் என்ற சிறப்பும் இவ்வாலயத்துக்கு உண்டு. ஏறத்தாழ 90 வருடமாக மஹிசாசுர சம்ஹாரம் சிறப்புற இவ்வாலயத்தில் நடைபெறுகிறது. இவ் உற்சவத்தினை சூரனின் படை வீரர்கள், அம்பிகையின் படைவீரர்கள் என வேடங்கள் தரிக்கவைத்துச் சிறப்புற நிகழ்த்துவதில் அத்தியடி வாழ் மக்கள் முன்னிற்கின்றனர். பரம்பரை பரம்பரையாக அங்கிருந்தே வேடந்தாங்கலை அழைத்து வந்து முன்னின்று நடத்தி வருகின்றனர். ஆலய மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் தெய்வமும் மஹிசாசுரவர்த்தனியே என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1981ஆம் ஆண்டளவில் மஹிசாசுர வர்த்தனி எழுந்தருளி விக்கிரகமும் ஆலயத்தில் கொண்டுவரப்பட்டு மஹிசாசுர சம்ஹாரத்தின் போது அவ் விக்கிரகமே வீதியு



லாவும் வருகின்றது.

அந்நியர் ஆட்சியின் போது நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உட்பட பல ஆலயங்கள் இடிக்கப்பட்ட போதும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்களால் மாதா கோயில் என நம்பி இடிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டதும் அம்மனின் திருவருற் சக்திகளுள் ஒன்றாகும்.

ஆயினும் அக்கால கட்டத்தில் நித்திய, நைமித்திய பூஜைகள் ஒழுங்காக நடைபெறாமல் தடைப்பட்டாலும் அதர்மங்களை அடக்கித் தர்மங்களை ஆண்டருள் புரியும் ஆதி பராசக்தியின் அருளாலும் சக்தியாலும் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் மீண்டும் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று நவராத்திரி விழா மட்டுமல்லாது வடக்கு மாகாணத்திலேயே மிகவும் விமர்சையாக வருடாந்த மஹோற்சவமும் தடைப்படாது நடைபெற்று வருகிறது.

முன்னைய காலங்களில் இந்தியக் கலைஞர்கள் இங்கு வருவிக்கப்பட்டு அவர் களின் கலைநிகழ்ச்சிகளும், வாண வேடிக்கைகளும் இணைந்து இராத் திருவிழாவாக நடைபெற்று வந்தது. நயினை நாகபூஷணி அம்மனினது இரதோற்சவ தினத்தன்று இங்கும் இரதோற்சவம் நிகழ்வதால் அடியார்கள் முன்னைய ஆண்டுகளில் காலையில் நயினையில் இரதோற்சவத்தைக் கண்டு களித்த பின்னர் மாலையில் வீரமாகாளி அம்மன் இரத பவனியையும் காணக்கூடியதாய் இருந்தது.

ஐந்து நூற்றாண்டுகள் பின்னோக்கிப் பார்க்கையில் ஆரிய மன்னர்கள் ஸ்தாபித்த ஆலயத்தில் வீரமாகாளி அம்பாள் மாத்திரம் எழுந்தருளியிருந்தாள். அம்பிகை மட்டும் எழுந்தருளி இருந்த காலத்தில் பத்து நாள் மஹோற்சவமும், இற்றைக்கு ஏழு தசாப்தங்களுக்கு முன்னர் பரிவார மூர்த்தமாக விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்ட பின்னர் பதினைந்து நாளாகவும், வள்ளி தெய்வானை சமேதராய் முருகப்பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்ட பின்னர் பதினெட்டு நாளாகவும், பின்னர் இருபத்தைந்து நாளாக வும் மஹோற்சவம் நடைபெற்றது.

ஆனி மாதத்துப் பூரணை தினத்தில் தீர்த்தோற்சவமும், துவஜாரோகணமும் நடைபெறக் கூடியதாக 25நாள் திருவிழா நடைபெறுகிறது.

19ஆம் நூற்றாண்டு ஆரம்பகாலக் கும்பாபிஷேகத்தின் பின்னர் சித்தார்த்தி ஆண்டு சித்திரைப் பூச நன்னாளில் 1979ஆம் ஆண்டு வைகாசி மாதம் மூன்றாம் திகதியில் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நீண்ட காலத்தின் பின்னர் ஆலயத் தொண்டர்களின் அயராத முயற்சியினாலும் அடியார்களின் பண உதவியினாலும் நடைபெற்றது. அன்றிலிருந்து இன்றுவரை ஆலயத்துக்குப் பரம்பரை பரம்பரையாகத் தொண்டுசெய்யும் தொண்டர்களின் முயற்சிகள் ஆலயத்தைப் புனரமைக்கப் பெரிதும் உதவுகின்றது.

பதின்மூன்று ஆண்டுகளின் பின்னர் அண்மைக்காலத்தில் 2002ஆம் ஆண்டு கர்ப்பக்கிரகத்தின் உத்திரவரியைத் தவிர மீதி அனைத்துப் பகுதிகளும் புனருத்தாரணம் செய்யப்பட்டு அவ்வாண்டு சித்திரை மாத அத்த நட்சத்திரத்தில் புனருத்தாரண வைகுண்ட கும்பாபிஷேகம் சிறப்பு வாய்ந்த சிவாச்சாரியர்களால் நிறைவேற்றப்பட்டது. கும்பாபிஷேகம் செய்யப்பட்ட போது நடாத்திய யாகத்தின் சிறப்பினாலும், அம்பிகையின் அருளாலும் தொடர்ந்து இவ் வருடம் ஆறாவது வருடமாக இன்றுடன் சிறப்புற

யாழினி விஜயாஸ்வரன்

நிறைவு பெறுவதும் இக்கட்டான இன்றைய சூழ்நிலையிலும் உள்மண்டப வேலைகள், இராஜ கோபுர வேலைகள் நடைபெற்று வருகின்றன. அது மட்டுமல் லாமல் புஸ்பரதமொன்று புதிதாக நிர் மாணிக்கப்பட்டு ஆனிப் பூர நட்சத்திரத்தில் 16ஆம் திருவிழாவன்று வெள்ளோட்டமும் நிறைவுபெற்றது.

சைவக்குருமார்களின் பூஜைச் சிறப்போடு ஆலயத் தொண்டர்களின் அயராத முயற்சியும் இணைந்து ஆலயம் புதுப்பொலிவு பெறுவது பாராட்டத்தக்க விடயமாகும்.

**சிவபக்தனாகிய இராவணன் ஆண்ட இலங்காபுரியின் மணிமுடியெனத் திகழும் யாழ்ப்பாண நன்னகரில் சைவமும், தமிழும் தழைத்தோங்கிய நல்லூர் வண்ணையம் பதியில் வீற்றிருந்து அண்டசராசரங்களையும் அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் வீரமாகாளியம்பாளின் வருடாந்த மஹோற்சவத் தீர்த்தத் திருவிழாவாகிய இன்று ஆலய வரலாற்றினையும் இவ்வாலய அம்பிகையின் அருட்கடாட்சத்தின் அளவிலா மகிமையையும் சற்றுப் பின்னோக்கிப் பார்ப்பது சாலப் பொருத்தமானது.**

# இன்று ஒரு தகவல்

## சிந்தித்துச் செயற்படு!

வளமான மரங்கள் நிறைந்த ஒரு காடு. அங்கே ஒரு நரி இருந்தது. அந்தக் காட்டுக்குப் பக்கத்திலே ஓர் ஊர்.

அங்கே ஒரு பெரிய வீடு. அந்த வீட்டிலே ஒரு பூனையை வளர்த்தார்கள். அந்தப் பூனை அடிக்கடி இந்தக் காட்டுக்கு வருவதுண்டு. அங்கேயிருந்த நரியுடன் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கும்! பொழுது சாய்ந்ததும் வீட்டுக்குப் போய் விடும்.

ஆக, அந்த நரியும் பூனையும் நண்பர்களே. ஒருநாள் அந்த நரி பூனையிடம் சொல்லியதாம்– "நண்பா! நானும் இன்று உன்னுடன் வருகிறேனே! உன்னுடன் வந்து உங்கள் வீட்டில் ஒருநாள் தங்கியிருந்துவிட்டு வரலாமென்று பார்க்கிறேன்" என்று.

"ஐயோ... அப்படியெல்லாம் செய்யாதே" என்றது பூனை.

"ஏன்?" என்று கேட்டது நரி.

"நீ எங்கள் வீட்டுக்கு வந்தால் அங்கே இருக்கிற எங்கள் வீட்டுக்காரர்கள் உன்னை அடித்து விரட்டுவார்கள். அதனாலே வரவேண்டாம்" என்றது பூனை.

இதைக் கேட்டதும் நரி "இதோ பார்... மனிதர்களுக்கு இரண்டு கால்! நமக்கு அப்படியில்லை... நமக்கு நாலு கால்! நாலுகால் உள்ள நாம் இரண்டு கால் உள்ள மனிதர்களுக்குப் பயப்படலாமா?... அதுவுமன்றி... அவர்கள் இந்நேரம் தூங்கியிருப்பார்கள். நாங்கள் போவது அவர்களுக்குத் தெரியாது. அதனால் தைரியமாக என்னைக் கூட்டிக் கொண்டு போ" என்றது.

பூனை எவ்வளவோ சொல்லிப் பார்த்தது. நரி கேட்கவில்லை. வேறு வழி இல்லையே என்று கடைசியாக அதை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு சென்றது. மெதுவாக மாடிப்படி ஏறி மொட்டை மாடியை அடைந்தன.

அங்கே போய்ச் சேர்ந்ததும் பூனைக்கு ரொம்ப மகிழ்ச்சி... யாருக்கும் தெரியாமல் வந்துவிட்டோமே என்று! அதனால் உற்சாகமாக "மியாவ் மியாவ்" என்று கத்த ஆரம்பித்தது. நரி பார்த்தது... நாம் மட்டும் ஏன் சும்மா இருக்க வேண்டும் என்று அதுவும் கத்த ஆரம்பித்தது...!

நரி ஊளையிடும் சத்தத்தைக் கேட்டதும் வீட்டுக்காரர்கள் விழித்துக் கொண்டார்கள். எல்லோரும் தடி, கம்புகளுடன் ஓடி வந்தார்கள்... அந்த நரியை அடியடி என்று அடித்துத் துரத்திவிட்டார்கள்.

அடி வாங்கிய நரி மெதுவாக தப்பிப் பிழைத்தோமென்று காட்டுக்கு ஓடியது. உடம்பு முழுவதும் காயம்! காட்டிலே இருந்த மற்ற நரிகள் எல்லாம் ஓடிவந்து சுற்றி நின்று கேள்வி கேட்க ஆரம்பித்தன.

"கூடா நட்பு கூடவா சொன்னோம்?" என்றனவாம்.

உடனே இது, "கூடினால் என்ன?" என்று கேட்டதாம்! "கூடங்கள் மாடங்கள் ஏறவா சொன்னோம்?" என்றனவாம் மற்ற நரிகள். "ஏன்? ஏறினால் என்ன?" என்றதாம் இந்த நரி. உடனே மற்ற நரிகள், இதோ பார்... கூடாத கூட்டு கூடக் கூடாது.

கூடினது போதாதென்று கூடங்கள், மாடங்கள் வேறே ஏறியிருக்கிறாய்... அதோடு நின்று விடாமல் பாட்டு வேறு பாடியிருக்கிறாய்! நாங்கள் நாதங்கள், கீதங்கள் பாடவா சொன்னோம் என்று சொல்லினவாம்.

உடனே அடிபட்ட நரி ரோஷத்துடன் "பாடினால் என்ன?" என்றதாம்.

"நீ பாடியதால் தான் மேளதாளங்களை உன்மேலேயே வாசித்திருக்கிறார்கள்..." என்றனவாம் மற்றைய நரிகள் எல்லாம் சேர்ந்து!

இருக்கிற இடத்திலே இருக்கவேண்டும் அதுதான் நமக்கு மரியாதை. அதைப் புரிந்து கொள்வதற்காகத் தான் இந்தக் கதை.

இதை அழகாக ஒரு நாட்டுப் புறப் பாடலிலே சொல்லியிருக்கிறார்கள்... நம் முன்னோர்கள்! அந்தப் பாட்டு என்ன தெரியுமா?

"கூடாதவர்களிடம்
கூடவா சொன்னோம்?
கூடினால் என்ன?
கூடங்கள் மாடங்கள்
ஏறவா சொன்னோம்?
ஏறினால் என்ன?
நாதங்கள் கீதங்கள்
பாடவா சொன்னோம்?
பாடினால் என்ன?
பாடினதினாலே
தாளங்கள் மேளங்கள்
தக்கத் திம்மென விழுந்தனவே!

அதனாலே இந்த உலகத்திலே நாம் எதைச் செய்தாலும் யோசித்துச் செய்ய வேண்டும்... அது முக்கியம். ஒருத்தருக்கு நீச்சல் குளத்திலே குதித்து விளையாட வேண்டுமென்று ஆசை. உடனே ஒரு நீச்சல் குளத்தைத் தேடிப் போனார்.

திரும்பிவரும் போது உடம்பூரா கட்டுப் போட்டுக் கொண்டு வந்தார். என்னங்க இது என்று கேட்டார் வீட்டுக்கார அம்மா. முன் யோசனை இல்லாமல் அந்தக் குளத்திலே போய் 'நீச்சல்' அடித்துவிட்டேன் என்றார்.

"என்ன ஆச்சு?" என்று கேட்டார் வீட்டுக்கார அம்மா.

"நீச்சல் அடித்ததுக்கு அப்புறம் தான் தெரிந்தது அந்தக் குளத்திலே தண்ணீர் இல்லை என்பது" என்றாராம் அவர்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## அலங்கார உற்சவம் -2007

தெல்லிப்பழை கிழக்கு திருவருள் மிகு குருநாத சுவாமி கோயில் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு அலங்கார உற்சவம் 3ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகி பன்னிரெண்டு தினங்கள் நடைபெறும்.

இவ்விழாவில் 3ஆம் திகதி செவ்வாயன்று 8.00 மணிக்கு சங்காபிஷேகமும், 10ஆம் திகதி செவ்வாயன்று ஷண்முகர் அபிஷேகமும், 14ஆம் திகதி சனி காலை தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (அ-6)

## நிர்வாகக் குழுக்கூட்டம்

டிப்ளோமா ஆங்கில ஆசிரியர் மன்றத்தின் நிர்வாகக் குழுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதுவரை பதிவு செய்யாத அனைத்து டிப்ளோமா ஆசிரியர்களையும் பதிவு செய்யுமாறு நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (அ-6)

## மக்கள் வங்கியின் சிரமதான நிகழ்வு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மக்கள்வங்கி, மக்கள் வங்கியின் 46ஆவது ஆண்டு விழாவையொட்டி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் குழந்தைகள், சிறுவர் விடுதியில் சிரமதான நிகழ்வொன்றை நாளை ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளவுள்ளது.

பருத்தித்துறை மக்கள்வங்கி முகாமையாளர் எஸ்.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இச் சிரமதானத்தை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை ஆரம்பித்து வைப்பார்.

இச் சிரமதான நிகழ்விலே மக்கள் வங்கி வடவலய உதவிப் பொது முகாமையாளர் கே.ஆனந்தராஜா, வடக்கு –கிழக்கு மாகாண யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்கின்றனர். அன்றையதினம் வைத்தியசாலை கட்டடத் திருத்தத்திற்காக 1 இலட்சம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருட்கள் வைத்தியசாலைக்கு கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-52)

## 185ஆவது ஆண்டுவிழாவும் பரிசளிப்பு விழாவும்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 185ஆவது ஆண்டுவிழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவிலே யாழ்.கல்வியியற் கல்லூரி ஆசிரீய கல்வியியலாளர் திருமதி செல்வமலர் சிவபாதம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

பாடசாலையின் இணையத் தளத்தை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கவுள்ளார். பரிசில்கள் வழங்குவதையடுத்து கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (அ-52)

## அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித் தினத்தில் நடாத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் சுழிபுரம் வழக்கம்பரை மூத்தோர் துயரினைப் போக்கும் சிவபூமி முதியோர் இல்ல ஸ்ரீஞான வைரவர் ஆலயத்தில், ஆலயப்பூசையைத் தொடர்ந்து செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்களின் ஆசி உரையுடன் மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும்.

விசேட நிகழ்ச்சியாக அகில இலங்கைத் திருமுறை மன்ற தேவாரப் பண்ணிசைப் பயிற்சி பெறும் திருமுறை இசை மாமணி மூன்றாம் ஆண்டு மாணவர்களான செல்வி சுகந்தினி சிவராசா, செல்வி நிஷாந்தினி நடராஜா, செல்வி ஜெயப்பிருந்தா மகேந்திரன் ஆகியோரின் தேவார இன்னிசை நிகழ்வும் இடம்பெறும்.

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### தீர்த்தத் திருவிழா

### தீயர் தாமும் சீலமுற வேண்டுமென்றே

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என் இனத்தோர் வாழ்வென்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தம் என்ற
உண்மையை யான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்கும் தீயர், தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவர் ஒப்பில்லாத் தாயே இந்தத்
தரணியில் சாந்தியையே தருவாய் நீயே!

நயினை க. இராமச்சந்திரா

### அருளுவாய் நாகம்மாளே!

கண்கண்ட தெய்வமான நயினையின் நாயகியே
பண்கண்ட கவிஞர்க் கெல்லாம் உறுபொருள் வழங்கிடுவீர்
தேடிவரும் துன்பமெல்லாம் துகளாகச் செய்திடுவீர்
கூடிவரும் அடியார்க்கெல்லாம் உறும் வரம் அளித்திடுவீர்
யுத்தத்தால் துவளுகின்ற துயர்கள்பல போக்கிடுவீர்
எத்திசையும் செல்வம்வர அருளுவாய் நாகம்மாளே!

கவிமணி கந்தமுருகேச தாசனார்

### சிந்தை மகிழவருள் தா

நல்லருளை நல்குமுயர் நாகதீப நாயகியே
பொல்லா வினைபோக்கும் பூமணியே- எல்லாமே
உந்தன் செயலென் றறிந்து பணிகின்றோம்
சிந்தை மகிழவருள் தா

அரியாலையூர் சி.சிவதாசன்

### பேறுகள் அளிப்பாள் எங்கள் தாய்

கருணையைப் பொழிந்திடும் காமாட்சியாகக்
காட்சி கொடுப்பாள் எங்கள் தாய்
வருவினை போக்கிடும் விசாலாட்சியாக
வரங்கள் அளிப்பாள் எங்கள் தாய்
புரிவாள் புதுமைகள் புவனேஸ்வரியாக
புவிதனில் இருப்பாள் எங்கள் தாய்
திருவருள் தந்திடும் மீனாட்சியாகத்
தினமும திகழ்வாள் எங்கள் தாய்
அருள்ஞானப் பாலூட்டும் உமையவளாக
அவனியில் அமர்வாள் எங்கள் தாய்
பெருமைமிகு நயினையில் நாகேஸ்வரியாக
பேறுகள் அளிப்பாள் எங்கள் தாய்

சிந்துபுரக் கவிராயர்

### நிரந்தர சமாதான வாழ்வை நீ தரவேண்டும்!

அன்னை யென்று ஓடிவந்து சரண்புகுந்தோம்
அதிக வரம் எமக்களித்து காத்திடம்மா
முன்னை வினை தீர்த்தருள வேண்டுமம்மா
முப்பத்திரெண்டு அறம் வளர்க்கும் நாயகியே
உன்னைப் பணிந்தோர்க்கு உற்றதுணையாய் நீயிரம்மா
உலகாளும் நயினை நாகபூஷணியே சரணமம்மா
நின்னடியை சரண்புகுந்து வேண்டுகிறோம்
நிரந்தர சமாதான வாழ்வதனை தந்திடம்மா

அ.கலாநிதி

### அரணாய் காத்திடு எம்மை

கடல் சூழ் நால்புறம் நயினையிலே - எம்
காவல் தெய்வம் நாக பூஷணி அம்மையே
தொடர்பின்றி மக்கள் உயிர் இங்கே
தெருத் தெருவாய் கிடக்குதம்மா
தாயே வந்து அரணாய் காத்திடு எம்மை

ஸ்ரெலா ஜெரோம், சில்லாலை

### நினைவிலே... ஒளிரும் தீபம் !

ஆழியின் நடுவே; நயினையம்மா நீ !
அநீதியை அழிக்க; வைப்பாயே தீ !
வலம்புரி நாதமாய்; உந்தனது கீதம்
வண்ணங்கள் வாழ்வில்; சேர்த்திடும் வேதம்

இ.விஜயசுமன், தென்புலோலியூர்

> ஆறுதல் சொல்ல ஆட்கள் உண்டேதவிர, உண்மை யான உதவியாளர்கள் இல்லை.
>
> -இந்தியா

வலம்புரி

# இலங்கைத் தமிழர் விடயத்தில் அமெரிக்காவின் சிந்தை தெளிவு

தமிழர்கள் தமது சொந்த விடயங்களைத் தாமே நிர்வகித்துக் கொள்ளும்வகையில் அவர்களுக்கான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றிச்சட் பௌச்சர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்திருந்த றிச்சட் பௌச்சர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் மக்கள்படும் அவலங்களை கேட்டறிந்த அவர், அமெரிக்காவுக்குச் சென்ற பின்னர் இலங்கைத் தமிழர் குறித்த விடயத்தில் நேர்க் கணிய மாற்றத்தை அந்நாடு எடுத்துக் கொண்டுள்ளது.

இலங்கை அரசின் சார்புடைய நாடாக விளங்கிய அமெரிக்கா, இலங்கை அரசின் யுத்தத்திற்கான ஆயுதங்கள், யுத்தப் பயிற்சிகள் எனப் பலதரப்பட்ட உதவிகளை வழங்கிவந்தது.

இலங்கை அரசுகள் மேற்கொண்டு வந்த பிரசாரங்களின் மாய வலைக்குள் வீழ்ந்த அமெரிக்கா, இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளை நியாயமற்றதாகவே கருதியது.

இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து உடுவில் மகளிர் கல்லூரியின் விழாவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரையில் தமிழ் மக்கள் தங்களுக்கென நாடு கேட்பது; தமக்கென குறித்த பிராந்தியத்தை ஒதுக்கித் தருமாறு கேட்பதெல்லாம் தவறானது.

இலங்கை என்ற நாட்டில் எவரும் எங்கும் வாழக் கூடியதாக இருக்க வேண்டும். இதில் இனரீதியான பிரதேச ஆளுகைகள் பொருத்தமற்றவை என்ற பொருளில் உரைநிகழ்த்தினார்.

கூடவே இலங்கைத் தமிழர்களுக்குப் பிரச்சினையிருப்பதாகக் கூட அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. விழாவில் கலந்து கொண்டவர்களை மேற்கோள் காட்டி யாழ்ப்பாணத்திலும் மக்கள் பிரச்சினைக்குள் வாழ்வதுபோல் தெரியவில்லை எனக் கூறியிருந்தார்.

அமெரிக்கத் தூதுவரின் அன்றைய பேச்சு இலங்கைத் தமிழர்களுக்குப் பெரும் வேதனையைக் கொடுத்தது. இவ்விதம் அமெரிக்கத் தூதுவர் பொறுப்பற்ற முறையில் உரையாற்றுவதற்கு அடிப்படைக் காரணம் இலங்கை அரசு வெளிநாடுகளில் மேற்கொண்ட பொய்ப் பிரசாரங்களாகும்.

ஆனால் இப்போது உண்மை நிலையை அமெரிக்கா புரிந்து கொண்டு விட்டது. அதன் காரணமாகவே இலங்கைக்கான நிதி உதவியை அந்நாடு நிறுத்தியுள்ளது.

அதேநேரம் இலங்கை அரசு மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது எனவும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் எல்லை கடந்து விட்டது எனவும் அமெரிக்கா கூறிவருகின்றது.

இந்நிலையில் அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலர் பௌச்சர், அமெரிக்காவின் உண்மை நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளார். அதன்படி தமிழ் மக்கள் தமது மரபு வழித் தாயகத்தில் பூரண சுதந்திரத்துடன் தம்மைத் தாமே நிர்வகிக்கும் அதிகாரத்தை உடையவர்களாக இருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இப்போதாவது அமெரிக்கா உண்மையைப் புரிந்து கொண்டமை இலங்கைத் தமிழர்களுக்கு ஆறுதல் தருவதாகவுள்ளது.

# விசாவை எடுத்துச் செல்ல மறந்தமையால் தர்மசங்கடத்துக்குள்ளான இலங்கை எம்.பி.

விசாவை எடுத்து வர மறந்து இந்தியா வந்திறங்கிய இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி உயர் கல்வியமைச்சருமான மயோன் முஸ்தபா விமான நிலையத்தில் சோதனையின் போது பெரும் தர்மசங்கடத்துக்குள்ளாகியுள்ளார்.

இது குறித்துத்தெரிய வருவதாவது, இலங்கையில் உயர் கல்வி அமைச்சர் பதவி வகிக்கும் முகமது முஸ்தபா, கொச்சினில் நடந்த விருது வழங்கும் விழா ஒன்றில் கலந்து கொள்வதற்காக அவர் 28 ஆம் திகதி காலை இலங்கை விமானம் மூலம் கொச்சின் வந்து இறங்கினார்.

அப்போது வழக்கமான சோதனையை மேற்கொண்ட விமான நிலைய அதிகாரிகள் அவரிடம் விசாவைக் கேட்டனர். ஆனால் முஸ்தபா அலுவல் ரீதியான கடவுச் சீட்டை எடுத்துக் காண்பித்தார். அதனுடன் இந்தியாவில் நுழைவதற்கான விசாவை அவர் இணைக்கவில்லை.

அவர் யார் என்பது தெரியாததால் விமான நிலைய அதிகாரிகள் அவரைக் கேள்வி கணைகளால் துளைத்து எடுத்தனர். பிரதி அமைச்சரும் சிறிது நேரம் திக்குமுக்காடிப் போனார்.

அதன்பின்பு தான் யார் என்பதைத் தெரிவித்துவிட்டு ஞாபக மறதியாக விசாவை எடுத்து வரவில்லை என்றும் கடந்த முறைவந்தபோது கடவுச் சீட்டுடன் விசாவை இணைத்திருந்ததாகவும் அதிகாரிகளிடம் கூறினார்.

இதனைத் தொடர்ந்து விமான நிலையத்தின் பதிவு அலுவலக அதிகாரிகள் மயோன் முஸ்தபா இந்தியாவில் தற்காலிகமாக 24 மணிநேரம் தங்கியிருப்பதற்கான அனுமதியை வழங்கினார்கள். இதற்குக் கட்டணமாக ஆயிரத்து 640 ரூபாவையும் பிரதி அமைச்சர் செலுத்தினார்.

அதன் பிறகே விமான நிலையத்தை விட்டு வெளியேற அவர் அனுமதிக்கப்பட்டார். பிரதி அமைச்சரும் நிம்மதி பெருமூச்சு விட்டவாறே அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். இலங்கைப் பிரதி அமைச்சரை விமான நிலைய அதிகாரிகள் பிடித்து வைத்திருந்ததாகத் தகவல்கள் வெளியாகின. ஆனால் அதை விமான நிலைய அதிகாரிகள் மறுத்துள்ளனர். (ச–5)

# பெற்றுக் கொள்ளாத லீவு நாள்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை

2006 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளாத லீவு நாள்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கும் ஏற்பாட்டில் ஆசிரியர்–அதிபர்களுக்கு மேலதிகமாக 7 தினங்கள் லீவு நாள்களாக கணிக்கப்பட்டு எஞ்சிய தினங்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குமாறு கல்வி அமைச்சு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

ஏழுதினங்களை மேலதிகமாக லீவு தினங்களாக கணிப்பீடு செய்து ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவது தொடர்பான அறிவுறுத்தல் ED/2/29/6/18/15 ஆம் இலக்க 2007.06.06 திகதிய கடிதத்தின் பிரகாரம் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் ஆர்.பீ. எம்.ரி.வீரதுங்கவினால் வழங்கப்பட்டுள்ளது.

மகிந்த சிந்தனை ஏற்பாட்டின் கீழ் அரசாங்க ஊழியர்கள் பெற்றுக் கொள்ளாத லீவு நாள்களுக்கு ஆகக் கூடியது 30 தினங்களுக்கு ஒரு மாதச் சம்பளத்தை மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவாகப் பெற்றுக் கொள்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளில், 30 நாள் ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கு அதிபர் – ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய அரசாங்க ஊழியர்கள் முன் அனுமதி பெற்றுத் தொடர்ச்சியாக 7 தினங்கள் ஓய்வு விடுமுறை பெற்றுக் கொள்வது அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டிருந்ததோடு ஆசிரியர்கள் அதிபர்களுக்குப் பாடசாலை தவணை விடுமுறை இருப்பதால் இது அவசியம் இல்லை எனக் கூறப்பட்டிருந்தது.

தற்பொழுது கல்வி அமைச்சு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைத்தள்ள 2007.6.6 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் 2007.3.9 ஆம் திகதிய மற்றும் 2007.4.8 ஆம் திகதி அறிவுறுத்தல்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அத்துடன் அரசாங்க ஊழியர்கள் மத்தியில் சமநிலையைப் பேணுவதைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்கள், அதிபர்களுக்கு 2006 ஆம் ஆண்டுக்கான பெற்றுக் கொள்ளாத லீவு நாள்களில் 7 தினங்களை மேலதிகமாகக் கழித்து எஞ் சிய தினங்களுக்கு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச–5)

# உலகம் முழுவதும் ஒரு நிமிடத்திற்கு ஆயிரம் செல்போன் விற்பனையாகிறது

உலகம் முழுவதும் ஒரு நிமிடத்திற்கு ஆயிரம் செல்போன்கள் விற்பனையாகிறது என்று புள்ளி விபரத்தில் தெரிய வந்துள்ளது. செல்போன் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை உலகில் விறுவிறுவென அதிகரித்து வருகின்றது. செல்போன் தயாரிக்கும் நிறுவனங்கள் போட்டிபோட்டு விலைக்குறைப்பு செய்வதாலும் செல்போன் சேவை வழங்கும் நிறுவனங்கள் நாளுக்குநாள் கட்டணத்தைக் குறைத்து வருவதாலும் கிராமப் புறப் பகுதிகளில் கூட செல்போன் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

உலகம் முழுவதும் செல்போன் பயன்படுத்துவோர் பற்றி இங்கிலாந்தைச் சேர்ந்த தி மொபைல் வேல்ர்டு என்ற நிறுவனம் புள்ளி விபரங்களைச் சேகரித்து அதன் அடிப்படையில் தகவல்களை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டிருப்பதாவது,

இந்த ஆண்டு ஜுலைக்குள் உலக மக்கள் தொகை 600 கோடியே 60 இலட்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டு இறுதிக்குள் உலகில் 325 கோடி பேரிடம் செல்போன் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது உலக மக்களில் பாதிப் பேரிடம் செல்போன் இருக்கும்.

உலகில் தற்போது ஒரு நிமிடத்திற்கு ஆயிரம் செல்போன்கள் விற்பனையாகின்றன. 100 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட சீனாவிலும் இந்தியாவிலும் செல்போன் விற்பனை அதிகரித்து வருவதே செல்போன் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை இந்த அளவிற்கு உயர்வதற்கு முக்கிய காரணம்.

உலகில் முதல் 100 கோடி செல்போன்கள் 20 ஆண்டுகளில் விற்பனையானது. இரண்டாவது 100 கோடி செல்போன்கள் 40 மாதங்களில் விற்பனையானது. தற்போது மூன்றாவது 100 கோடி செல்போன்கள் இன்னும் இரண்டு வருடத்தில் விற்பனையாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ச–5)

# தற்காலிக இணைப்புக் கிடைக்காதவர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த் உறுதி

தற்காலிக இணைப்புக் கிடைக்கப்பெறாதவர்களின் கோரிக்கைகள் சாதகமாக பரிசீலிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பணிபுரிந்து தற்போது வெளிமாவட்டங்களில் தங்கியுள்ள ஆசிரியர்களில் இதுவரை தற்காலிக இணைப்புப் பெறாதவர்களினால் கல்வி அமைச்சரிடம் தமது சொந்த இடங்களிலேயே தற்காலிக இணைப்பு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக நேற்று கல்வி அமைச்சில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதற்கமைய வட மாகாணம், மேல் மாகாண ஆளுநர்கள், பிரதம செயலாளர்கள் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர்களையும் அழைத்து விசேட கூட்டம் ஒன்றை நடாத்தித் தீர்வு காணப்படும் என அவர் உறுதியளித்துள்ளார். (ச–5)

# யுத்தமற்ற பிரதேசமாக மடுத் தேவாலயம்

(கொழும்பு)

மன்னார் மடுத் தேவாலயத் திருவிழாவையொட்டி அப்பகுதியை யுத்தமற்ற பிரதேசமாகத் தமிழீழ விடுதலைப்புலிகளும் இராணுவமும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று ஆயர் இராயப்பு யோசப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியதாவது, தேவாலயத்துக்கு வருவோருக்கான மன்னார் வீதியைத் தமிழீழ விடுதலைப் புலிகள் திறந்துவிட உள்ளனர். மடுத் தேவாலயத் திருவிழா குறித்துத் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தினோம்.




இப்பகுதியில் தாக்குதல்களை நிறுத்த இராணுவம் ஒப்புக் கொண்டது. அத்தகைய உறுதிமொழியுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தைச் சந்தித்தோம். விடுதலைப்புலிகளும் அதனை ஒப்புக் கொண்டனர் என்றார் அவர். (ச–5)

# விசாரணை அறிக்கையை வழங்குமாறு ஜனாதிபதி ஆணைக்குழு கோரிக்கை

(கொழும்பு)

தீவகம் அல்லைப்பிட்டியில் கடந்த வருடம் மே மாதம் இரவு வேளையில் வீடுகளிற்குள் வைத்து பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையை ஊர்காவற்றுறை நீதிமன்றத்திடமிருந்து ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு கோரியுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காகத் தமக்கு நீதிமன்றின் அறிக்கை தேவைப்படுவதாகவும் அதனைத் தந்துதவுமாறு நீதிமன்றத்திடம் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு கேட்டுள்ளது. (ச–5)

நேற்றைய நயினை நாகபூசணி அம்மன் இரதோற்சவத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் (படங்கள் :திலீவின்

# மக்களின் அவலங்களை கருத்தில் கொண்டு யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்த முன்வரவேண்டும்

## அரசு-புலிகளுக்கு சர்வமத தலைவர்கள் அழைப்பு

(கொழும்பு)

அப்பாவி மக்கள் அனுபவிக்கும் சொல்லொணாத் துயரங்களையும் அவலங்களையும் கருத்தில் கொண்டு அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் உண்மையான யுத்த நிறுத்தம் ஒன்றுக்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவேண்டுமென சமாதானத்திற்கான சர்வமதத் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

தேசிய சமாதானப் பேரவையின் ஆதரவில் நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சமாதானத்திற்கான சர்வமத தலைவர்களின் மாநாட்டிலேயே இவ் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாநாட்டில் கலந்து கொண்ட சர்வமதத் தலைவர்கள் மோதல்களை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகளை வலியுறுத்தி தீர்மானங்களை நிறைவேற்றினர். அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இனப்பிரச்சினைக்கான அடிப்படை விடயத்தில் தீர்வுகாண்பதற்கு திட்டவட்டமான பேச்சுவார்த்தையை நடாத்த வேண்டும். இதற்கு சகல அரசியல் கட்சிகளும் தமது ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்கவேண்டும். சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வினை அடைவதற்கு அர்த்தமுள்ள சமாதான செயற்பாடுகளை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் முன்னெடுக்க வேண்டும்.

இரு தரப்பினரும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு திரும்புவதற்கு சர்வமத சமூகம் அழுத்தங்களை வழங்கவேண்டும். யுத்த முனைப்புடன் செயற்பட்டு வன்முறைகளையும் இரத்தம் சிந்துதல்களையும் ஏற்படுத்தியுள்ள இரு தரப்பினரும் தமது நடவடிக்கைகளை கைவிட்டு சமாதான பாதைக்கு திரும்புமாறு மதத்தலைவர்கள் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கவேண்டும் என்ற தீர்மானங்கள் சர்வமதத் தலைவர்களால் நிறைவேற்றப்பட்டன. (ச-5)

# சித்தாண்டியில் இளைஞர் சுட்டுக்கொ

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சித்தாண்டியில் அடை தெரியாத ஆயுதக்குழுவினரால் தமிழ் ஞர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப் ளார். சித்தாண்டி மாரியம்மன் கோவி அருகில் நேற்று முன்தினம் இரவு 8. மணியளவில் அவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் சித்தாண்டி முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த பி.நிசாந்தன் (வயது 16) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மாரியம்மன் கோவில் திருவிழாவில் கலந்து கொண்ட அவர் கோவிலுக்கு அரு கில் உள்ள வீதியில் நிற்கும்போது துப் கிச் சூட்டுக்கு இலக்கானார்.

# ரணில்-மங்கள சந்திப்பையடுத்து...

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் நேற்று வெள்ளிக்கிழமை மைத்திரிபால சிறிசேன கூறியதாவது, இலங்கை அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளி அரசைக் கவிழ்க்க மங்களவும் ரணிலும் முயற்சிக்கின்றனர்.

பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபாட்டுடன் உள்ளபோது இத்தகைய நெருக்கடிகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இந்த முயற்சியை அரசாங்கம் வெற்றிகரமாக முறியடிக்கும் சக்தியைக் கொண்டுள்ளது.

கிழக்கில் புலிகளைப் பலவீனப்படுத்தி தொப்பிக்கலவை மீட்கும் நடவடிக்கையை அரசாங்கம் வெற்றிகரமாக மேற்கொண்டு வரும் நிலையில் இத்தகைய நெருக்கடிகளை கொடுப்பதால் அரசாங்கத்தை தோற்கடிக்க முடியாது.

அதற்கு இடமளிக்கவும் மாட்டோம். ஐக்கிய தேசியக்கட்சியின் போலியான பிரசாரங்களை முறியடித்து விரைவில் உண்மையை அம்பலப்படுத்துவோம்.

இராணுவத்தினர் கிழக்கை கைப்பற்றி அங்கு சிறந்த சூழ்நிலையை உருவாக்கியுள்ளனர் என்பதையும் விரைவில் வெளிப்படையாக தெரியப்படுத்துவோம் என்றார் அவர்.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதால் அக்கட்சியிலிருந்து மேலும் பலர் அரசுடன் தாவக்கூடும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சுய கௌரவத்துக்காக ஒவ்வொருவரும் தாம் நினைத்தபடி எதனையும் செய்ய முடியாது. கட்சிக் கொள்கையின்படியே செய்ய வேண்டும். ஆனால் ரணில் விக்கிரமசிங்க தனது சுய கௌரவத்துக்காக கட்சியை பிளவு படுத்த முயற்சிக்கிறார் என ஐ.தே. கட்சியின் அதிருப்தியாளர் தெரிவித்துள்ளனர். (ச-3,5)

# எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு அரசியலில் மாற்றம் நிகழ்

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்து விரைவில் மேலும் சில அமைச்சர்கள் வெளியேறுவர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ அத்தநாயக்கா கூறியுள்ளார். கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் அவர் கூறியதாவது,

மகிந்த அரசாங்கத்தில் உள்ள சில அமைச்சர்கள் எமது கூட்டணியில் இணைவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர். மகிந்தவின் சர்வாதிகார அரசுக்கு எதிரான ஒரு பரந்த அரசியல் முன்னணியை உருவாக்குவோம்.

மகிந்த அரசாங்கத்துக்கு எதிரான எமது போராட்டத்திற்கு ஆதரவு தருமாறு அனைத்து ஜனநாயக அரசியல் கட்சிகளையும் ஐ.தே.க. கேட்டுள்ளது. எம்முடன் இணைய உள்ள அமைச்சர்களின் பெயர் விபரங்களை நாம் தற்போது வெளியிடமாட்டோம். ஆனால் எதிர்வரும் 3 மாதங்களுக்குள் முக்கிய அரசியல் மாற்றங்கள் நிகழும்.

இரு கட்சிகளும் மங்களவின் கொள்கை அறிக்கையை ஆராய்வதற்கு ஒரு இணை குழுவை உருவாக்க உள்ளது. ஜே.வி.பி ஐ.தே.கவை எதிர்க்கும் முன்னணி குறித் நாம் கவலை கொள்ளவில்லை.

ஜே.வி.பி.சிறிய வாக்கு வங்கியை கொண்டுள்ள கட்சி. நாம் நாடு முழுவதும் பெரு எண்ணிக்கையான வாக்கு வங்கியை கொண்டுள்ளோம். கடந்த அரச தலைவ தேர்தலின்போதும் மிகவும் குறைந்தளவ வாக்கு வித்தியாசத்தில் தான் மகிந்த வெற்றியீட்டியிருந்தார்.

தனியார் மயப்படுத்தல்களின் மூலம் அதிகளவான பணத்தை பெறும் பொருட்டு பொதுமக்கள் வர்த்தக பாதுகாப்பு ஆணைக் குழுவை அரசு இல்லாதொழிக்க முற்பட்டுள்ளது. இந்த நிறுவனம் இத்தகைய பணப் ரி மாற்றங்களை கண்காணிக்க என அமைக்கப்பட்டது என்றார் அவர். (ச-5)

# அரசு-...

புலிகளை முற்றாக வெளியேற்றி விட்டதாகக்கூறினாலும் இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமற்றது. இதனைக் கருத்தில் கொண்டு இரண்டு தரப்பினரும் பேச்சில் ஈடுபடவேண் டும் என சர்வதேச சமூகம் கூறியுள்ளது.

சமாதானப் பேச்சில் ஈடுபட இரு தரப்பினரும் இணங்காவிட்டால் அழுத்தங்களைப் பிரயோகிக்க சர்வதேச சமூகம் எண்ணியுள்ளதாக கூறப்பட்டது. (ச)

# யாழ்ப்பாணம்...

தாக்குதலில் வீதியால் சென்று கொண்டிருந்த சண்டிலிப்பாயைச் சேர்ந்த என்.நல்லையா (வயது 55), சுன்னாகத்தைச் சேர்ந்த ரி.வேல்முருகன் (வயது 42) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இருவரும் யாழ்.மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். தாக்குதல் சம்பவத்தை அடுத்து அப் பகுதியில் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதலும் மேற்கொள்ளப்பட்டது.

இதே வேளை வவுனியா செட்டிக்குளம் பகுதியிலும் நேற்று கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. செட்டிகுளத்தில் மதவாச்சி-மன்னார் வீதியில் காலை 7.35 மணிக்கு இத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

வீதிச்சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்குவைத்து இத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் இதில் பேரூந்து சிக்கியதில் மாணவர்கள், பொதுமக்கள் நான்கு பேர் படுகாயமடைந்ததாகவும் இராணுவ தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனை அடுத்து அப் பகுதியில் நடத்தப்பட்ட பாரிய தேடுதல் நடவடிக்கையின் போது மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். (ச-3,5)

# நல்லூர்...

அட்டைகள் மூலம் இனங்காணப்பட்டுள்ளது.

இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா பிரேதபரிசோதனைக்காக சடலங்களை யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

# நயினை...

பொதுமக்களின் அடையாள அட்டைகள் கடற்படையினரால் பெற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட அடையாள அட்டைகளை மீளப்பெறுவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக பெருமளவான மக்கள் மீளத்தமது இருப்பிடங்களுக்கு திரும்ப முடியாமல் நயினாதீவில் தங்கியுள்ளனர்.

இதேவேளை பெறப்பட்ட அடையாள அட்டைகள் நயினை இறங்குதுறையில் இருந்து இராணுவ முகாம் நோக்கி எடுத்துச் செல்லும்போது பலருடைய அடையாள அட்டைகள் காற்றில் பறந்து கடலில் வீழ்ந்தது. அவற்றை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் கடலலையில் சிக்குண்ட சில அடையாள அட்டைகளை மீட்கமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-3)

# காணாமல் போன 355 பேர்...

கையளிக்கப்பட்ட பட்டியலில் ஒரே பெயர் பல முறை இடம் பெற்றிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இதில் மாகாண வாரியாக வடக்கில் 253, மேற்கில் 78, வடமேற்கில் 07, வட மத்திய மாகாணத்தில் 06, கிழக்கில் 02, மத்திய மாகாணத்தில் 02 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஆணையமான மாநாம திலகரட்ண ஆணையத்தின் அறிக்கையின் படி அந்த ஆணையத்திடம் 79 பேர் தான் முறைப்பாடு செய்துள்ளனர்.

அதில் 14 முறைப்பாடுகள் மாநாம திலகரட்ண ஆணையத்தின் கால வரையறைக்கு உட்படாதமையால் மொத்த முறைப்பாடுகள் 65. இந்த 65 முறைப்பாடுகளில் 42 முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் நடாத்தப்பட்டு விட்டன.

23 முறைப்பாடுகள் தொடர்பாக மாநாம திலகரட்ண ஆணையம் விசாரணை நடத்துகிறது. குடியேற்றத்துறை திணைக்களத்தின் தகவலின்படி அமெரிக்காவினால் கையளிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெற்றிருந்தோரில் 05 பேர் வெளிநாடு சென்று விட்டனர்.

அமெரிக்காவின் பட்டியலில் இடம் பெற்றுள்ள பத்துப்பேர் உயிருடன் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் யாழ்.சுழிபுரம் மற்றும் சுன்னாகத்தைச் சேர்ந்த நவரட்ணம் கருணைதாசன், சரவணபவானந்தன் கரிகரன் ஆகியோர் தங்களது வீடுகளில் இருந்து கடத்தப்பட்ட பின்னர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இருவரது உடல்களும் மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

நீதிமன்றத்துக்கும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இது தொடர்பிலான விசாரணை அறிக்கைகள் கையளிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் பட்டியலில் உள்ள 200 பேர் தொ பாக இராணுவம் விசாரணை நடாத்தி வருகிற.

அமெரிக்காவின் பட்டியலில் உள்ள அ கரட்ணம் அருள்கண்ணா என்பவர் மட்டுமே இராணுவத்தினரால் 2006 நவம்பர் 28 ஆம் திகதி கைது செய்யப்பட்டு அதே நாளில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவ் வழக்கின் விசாரணை பருத்தி துறை நீதிமன்றில் எதிர்வரும் யூலை 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அமெரிக்காவினால் கையளிக்கப்பட்ட பட்டியலில் பெரும் பகுதியானோர் வட பகுதியைச் சேர்ந்தவர்கள்.

அவர்கள் விடுவிக்கப்படாத பகுதிக்குள் நுழைந்திருக்ககூடிய சாத்தியங்கள் உண்டு. கண்டு பிடிக்கப்படாத 180 பேர் குறித்து விடுவிக்கப்படாத பகுதிக்குள் இயங்குவதால் செஞ்சிலுவைச் சங்கத்திடம் தெரிவிக்கப்பட்டது.

ஜெனீவாவில் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தினர் இம் மாத முற்பகுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இது தொடர்பான அறிக்கையை கையளிப்பர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச-5)

[illegible] மனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.